## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 396/2015**

திரு. மணிவண்ணன் (P.W. –1) **17.2.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு இருதரப்பு அனுமதியுடன் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவாவில் ஏற்கனவே முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு இரண்டு, மூன்று பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பிறகு தாவா சில காரணங்களுக்காக செய்யத் தக்கவை செய்வதாக கருதி தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பிறகு நான் இரண்டாம் வாதிக்காகவும் சேர்த்து முறையான மனு தாக்கல் செய்து தாவா மீண்டும் கோப்புக் எடுக்கப்பட்டுள்ள செய்யத்தக்கவை செய்ததாக கருதி தள்ளுபடி செய்யப்பட்ட சமயத்தில் நான்காம் பிரதிவாதி தாவா சொத்தை ஐந்தாம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார். அவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்னை கட்டுப்படுத்தாது அந்த ஆவணத்தின் மூலம் ஐந்தாம் பிரதிவாதிக்கு எந்த ஒரு உரிமையோ பாத்தியமோ ஏற்படாது.

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்து உள்ளேன் என்றால் பட்டப்படிப்பு படித்து உள்ளேன். 2002 ஆம் வருடம் தாவா சொத்தை பொருத்து இரண்டாம் பிரதிவாதி மூன்றாம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரி. அதன் பிறகு மூன்றாம் பிரதிவாதி நான்காம் பிரதிவாதி பேரில் ஏற்படுத்திய கிரைய ஆவணம் செல்லாது ரத்து செய்ய வேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரி. தாவாவில் நான் இரண்டாம் பிரதிவாதிக்கு தாவா சொத்தைப் பொறுத்து பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தி உள்ளேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி. பொது அதிகார ஆவணம் பதிவு செய்து ஏற்பட்டுள்ளது என்றால் சரி. இரண்டாம் வாதி என்னுடைய மனைவி என்றால் சரி. இரண்டாம் வாதிக்கு பாத்தியப்பட்ட

சொத்தை பொருத்தும் இரண்டாம் பிரதிவாதி பெயரில் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தோம் என்றால் சரி. அதுவும் பதிவு ஏற்பட்ட ஆவணம் என்றால் ஆமாம். தாவா வழக்குரையில் ஒன்பதாவது பத்தியில் தாவா சொத்தை பொறுத்து 1,2 பிரதிவாதிகள் 20 லட்சம் கடன் வாங்கி தருவதாக சொன்னதால் பொது அதிகாரம் ஏற்படுத்தியதாக சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம்.

2. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 20,00,000/-ரூபாய் கடனுக்காக தான் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்ற விவரத்தை சொல்லி உள்ளேன் என்றால் பணம் உதவி செய்வதற்காக எழுதிக் கொடுத்ததாக சொல்லி உள்ளேன். 20 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளீர்களா என்றால் இல்லை. நில அபிவிருத்தி செய்வதற்காக பொதுஅதிகார ஆவணம் ஏற்படுத்தியதாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன். ஆனால் தாவா வழக்குரையில் அதை வாதுரைக்கவில்லை என்றால் சரியல்ல. நில அபிவிருத்தி என்ற விவரத்தை சொல்லாமல் முதல் விசாரணையில் புதிதாக சொல்லி உள்ளோம் என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஹைபிரிட் நாய்கள் வளர்ப்பதற்காகத்தான் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரி.

3. இரண்டு காரணங்களுக்காகவும் சொன்னேன். வெளிநாட்டிலிருந்து பணம் வாங்கி தருவதாக இரண்டாம் பிரதிவாதி சொன்னார் என்ற விவரங்களை தாவா வழக்குரையில் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. தாவாவில் வாதுரைக்காத சங்கதிகள் எல்லாம் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது. அது செல்லாது என்றால் எனக்கு தெரியாது. பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திய போது அசல் ஆவணங்களையும் ஒப்படைதீர்களா என்றால் ஒப்படைத்தேன். முதல் பிரதிவாதியிடம் கொடுத்தேன். அவர் அதை வாங்கி இரண்டாம் பிரதிவாதியிடம் கொடுத்தார். இரண்டாம் பிரதிவாதி பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் மூன்றாம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்ற விவரம் எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் 2006 ஆம் வருடம் கடைசியில் தெரிய வந்தது. அந்த விவரத்தை தாவா

வழக்குரையில் சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணத்தை பொது அதிகார முகவருக்கு முறையாக அறிவிப்பு அனுப்பி பதிவு ஆவணம் மூலமாகத்தான் ரத்து செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

4. பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய எனக்கு உரிமை உண்டு அதை எப்படி வேணாலும் நான் ரத்து செய்வேன். எப்படி அந்த ஆவணத்தை ரத்து செய்தேன் என்றால் தபால் அலுவலகத்தின் மூலம் பொது அதிகார முகவருக்கு சர்டிபிகேட் ஆப் போஸ்டிங் மூலம் அனுப்பி ரத்து செய்தேன். அதற்கான ஆதாரம் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் தான் **வா.சா.ஆ–5** என்றால் சரி. **வா.சா.ஆ– 5** அந்த ஆவணத்தை இரண்டாம் பிரதிவாதி பெற்றுக் கொண்டார் என்பதற்கு அத்தாட்சி உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ– 6 ன்படி பொது அதிகார ஆவணம் எதற்காக ரத்து செய்யப்பட்டது என்ற விவரம் சொல்ல முடியுமா என்றால் பண உதவி செய்வதாக சொன்னார்கள். அதற்காகத்தான் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. அதை செய்ய தவறியதால் நீக்குறவு செய்தேன். வா.சா.ஆ–5,6 ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

5. இரண்டாம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பொது அதிகார ஆவணத்தை வா.சா.ஆ–5ன் மூலம் ரத்து செய்த பிறகு பொது அறிவிப்பின் மூலம் அதன் விவரங்களை கொடுத்து ரத்து செய்து விட்டேன் என்பதை தெரிவித்தீர்களா என்றால் இல்லை. அதன் பிறகு தாவா சொத்தில் அசல் ஆவணம் இரண்டாம் பிரதிவாதியிடம் உள்ளது என்பதால் அதை திரும்ப பெற நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் கடிதம் எதுவும் எழுதவில்லை. முதல் பிரதிவாதி என் நண்பர் என்பதால் அவரிடம் சென்று முறையிட்டேன். 1ம் பிரதிவாதி என்ன செய்தார் என்றால் வாங்கி கொடுப்பதாகச் சொன்னார். 2002 ஆம் வருடம் நான் ஏற்படுத்திய பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி சரியான பிரதி பிரயோஜனம் பெற்றுக்கொண்டு 3ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் தவறு. 2ம் பிரதிவாதி 3ம்

பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய கிரைய ஆவணம் விபரங்கள் தெரிந்து கொண்ட தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்குள் அந்த ஆவணம் செல்லாது என்று சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றால் அதைப் பற்றி எங்களுக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எப்போது கிரைய ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் 2006 வருடம் ஏற்படுத்தப்பட்டது.

6. நான் அத்துமீறி தாவா சொத்தில் நுழைந்து அவரை அடிக்க முற்பட்டேன் என்று நான்காம் பிரதிவாதி ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரி. தாவா சொத்தில் சுவாதினத்தில் அப்போது நான்காம் பிரதிவாதி இல்லை. அதை பொறுத்து முதல் தகவல் அறிக்கை ஏற்படுத்தப்பட்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பல்லடம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று எனக்கு தண்டனை வழங்கப்பட்டது என்றால் சரி. அதன் பிறகு மேல் முறையீடு தாக்கல் செய்து தண்டனையிலிருந்து விலக்கு பெற்றுள்ளேன். தாவா சொத்தில் நான் சுவாதினத்தில் உள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் வீட்டு வரி ரசீது, கந்தாய ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஒரு வீட்டு வரி ரசீது தாக்கல் செய்யவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வா.சா.ஆ–14 முதல் வாசா.ஆ– 27 வரை தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் 2000 முதல் 2004 ஆம் வருடத்திற்கு உரியவை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தாவா சொத்தில் நான் சுவாதினத்தில் உள்ளதாக கருத முடியாது என்றால் சரியல்ல.

7. தாவாவில் தாக்கல் செய்துள்ள மின்சார கட்டண ரசிதுகளுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மின்சார கட்டண ரசீதின் அடிப்படையில் தாவா சொத்தின் சுவாதீனத்தை முடிவு செய்ய முடியாது என்றால் சரியல்ல. தாவாவில் மூன்று, நான்கு, ஐந்து பிரதிவாதிகளுக்கு எதிராக கோரி உள்ள பரிகாரங்கள் சரியானவை அல்ல செல்லாது என்றால் சரியல்ல. 3 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் மோசடியாக உருவாக்கப்பட்டது என்பதை பொறுத்து அவர்கள் மீது போலீசில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். நாங்கள் கொடுத்த புகார்களை

காவல்துறை அதிகாரிகள் எடுத்துக் கொள்வதில்லை. அதன் பிறகு காவல்துறை மேலதிகாரிகளிடம் புகாரை கொடுக்கலாம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ரெண்டு முதல் ஐந்து பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட ஆவணங்கள் செல்லாது வாதிகளை கட்டுப்படுத்தாது. அதை ரத்து செய்ய வேண்டும் என்று பரிகாரம் கோர தவறியதால் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதியிடம் எனக்கு நல்ல தொடர்பு உள்ளது என்பதால் நானும் அவரும் சேர்ந்து அக்கிரம லாபம் அடைய பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதிக்கும் எனக்கும் பழக்கம் இல்லை. ஒண்ணாம் பிரதிவாதியுடன் மட்டும் தான் எனக்கு பழக்கம். 1ம் பிரதிவாதியும், நானும் சேர்ந்து அக்கிரம லாபம் அடைய வேண்டி பொய் வழக்கு தாக்கல் செய்து உள்ளோம் என்றால் தவறு. தாவா பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல. தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல. சட்டப்படி பதிவு செய்யப்பட்டு ஏற்படுத்தப்பட்ட பொது அதிகார ஆவணத்தை சட்டத்திற்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் ரத்து செய்ய தவறி உள்ளதால் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள கிரயங்கள் அனைத்தும் செல்லும் என்றால் சரியல்ல.

5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.02.17 18:58:28 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.